சேலம் மாவட்டம் பெத்தநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியம் புத்திரகவுண்டன்பாளையம்
ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை : சிவகாமி

ந.க.எண்.134/2024/அ1 நாள். 27.05.2024

பொருள் : மனைப்பிரிவு – பெத்தநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியம் – புத்திரகவுண்டன்பாளையம் ஊராட்சி சர்வே எண்கள். 145/1 ஏ, 145/2ஏ, 146/10–ல் 2.31 ஏக்கர் பரப்பில் உள்ள இடத்தில் அமைந்துள்ள குடியிருப்பு மனைப்பிரிவுகளை வரன்முறை செய்து உத்தரவிடல் – சார்பு.

பார்வை :
1. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், சேலம் மண்டலம் அவர்களின் கடித ந.க.எண். SLM/1J3Q09ZW/21470/2024/2024/TCP, நாள்.02.05.2024.
2. திரு.எம். ஆறுமுகம் த/பெ. முருகேசன், 2/310,மேற்குபனந்தோப்பு, இராமநாயக்கன்பாளையம் கிராமம்,, ஆத்தூர் (வட்டம்), சேலம் மாவட்டம்.

((((0))))

உத்தரவு :-

பார்வை–1ல் காணும் கடிதத்தில் சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றித்திற்குட்பட்ட புத்திரகவுண்டன்பாளையம் ஊராட்சி சர்வே எண்கள். 145/1 ஏ, 145/2ஏ, 146/10–ல் 2.31 ஏக்கர் பரப்பில் உள்ள இடத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப அனுமதி வரைபட பரப்பில் உள்ள இடத்தில் மனைப்பிரிவு அமைக்க உத்தேச மனைப்பிரிவிற்கு Approval No.SWP/DTCP/SALEM/LAYOUT No.8 /2024 என எண்ணிடப்பட்டு, தொழில்நுட்ப அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது.

பெத்தநாயக்கன்பாளையம் வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு மனை நில உபயோக மாற்றத்திற்கான 3% Market Value கட்டணம் ரூ.34650/–ஐ உரிய அரசு தலைப்பிலும் மற்றும் 44 மனைகளுக்கு சேர்த்து (44*1000=44000) ரூ.44000/– ஐ(ரூபாய் நாற்பத்து நான்காயிரம் மட்டும்) ஐ புத்திரகவுண்டன்பாளையம் ஊராட்சி கணக்கிலும் செலுத்தி அதற்கான இரசீதினையும் சேர்த்து இவ்வலுவலகத்தில் சமர்ப்பித்துள்ளார்,

மேலும் பார்வை–6ல் காணும் பதிவு துறையில் பதிவு செய்யப்பட்ட பத்திரத்தின்படி ஊராட்சிக்கு ஒதுக்கப்பட்ட சாலைகள் மற்றும் திறந்தவெளி இடங்களை புத்திரகவுண்டன்பாளையம் ஊராட்சி மன்ற தலைவர் பெயருக்கு தான பத்திரம் செய்து பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி, சேலம் மாவட்டம் புத்திரகவுண்டன்பாளையம் ஊராட்சி சர்வே எண்கள். 145/1 ஏ, 145/2ஏ, 146/10–ல் 2.31 ஏக்கர் பரப்பில் உள்ளகுடியிருப்பு மனைப்பிரிவு அமைய உள்ள இடத்திற்கு கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு இச்சர்வே எண்ணில் அமைபும் 44 மனைகளை வரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

<u>நிர்ணயிக்கப்படும் நிபந்தனைகள்.</u>

1. பார்வை 1–ல் காணும் உதவி இயக்குநர், சேலம் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், சேலம் அவர்களின் உத்தேச மனையிட தொழிநுட்ப ஒப்புதல் கடிதத்தில் தெரிவித்துள்ள அனைத்து நிபந்தனைகளையும் பின்பற்ற வேண்டும்.
2. உத்தேச மனையிட தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடத்தில் உள்ள அளவு விபரங்களை இவ்வலுவலக அனுமதியின்றி மாற்றிமைக்க கூடாது.
3. ஒப்புதல் வழங்கப்படும் மனையிடம் குடியிருப்பு வீடுகள் அமைப்பதற்கு மட்டும் அனுமதிக்கப்படுகிறது. அபாயகரமான மற்றும் அருவருக்கதக்க தொழிற்சாலை ஏதும் ஏற்படுத்த அனுமதியில்லை.

4. மனுதாரர் செலுத்தியுள்ள கட்டண விகிதங்களில் வேறுபாடுகள் ஏதுமிருந்து செலுத்த வேண்டி இருப்பது ஏதேனும் பின்னர் கண்டறியப்பட்டால் உரிய தொகையினை மனுதாரர் செலுத்த வேண்டும்.
5. அரசின் கொள்கை அளவிலான மனை ஒப்புதலுல், அரசு மாற்றம் ஏதேனும் செய்து உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டால், அந்த உத்தரவுகளுக்கு மனுதாரர் கட்டுப்பட்டவர் ஆவார்.
6. பத்திர பதிவு மற்றும் நில உரிமை தொடர்பாக ஏற்படுத்தப்படும் சிவில் மற்றும் இதர வழக்குகளுக்கு மனுதாரரே முழு பொறுப்பாவார்.
7. திறந்தவெளி இடத்திற்காக ஒதுக்கப்பட்ட நிலத்தின் வாயிலாக, மனுதாரரால் விற்பனை செய்யப்பட உள்ள மனை நிலங்களுக்கான உயர் அழுத்த / சாதாரன மின் அழுத்த மின்சார பாதை (லைன்) அமைத்து மின் வசதி செய்துகொள்ள அனுமதி இல்லை.
8. விற்பனை செய்யப்படாத ஒவ்வொரு மனைப்பிரிவும், பத்திர பதிவு செய்யும் போது, மனைப்பிரிவு அங்கீகார வரைபட நகலினை இணைத்து பத்திர பதிவு செய்திட வேண்டும்.
9. மேற்குறிப்பிட்ட நிபந்தனையை மீறிகாலோ, மனுதாரரால் அளிக்கப்பட்ட விபரங்கள் சரியானவை அல்ல என்று ஏதேனும் பின்னர் காலங்களில் அறியப்பட்டாலோ அல்லது அரசு விதிமுறைகள் மீறப்பட்டாலோ இம்மனை ஒப்புதல் முன்னறிவிப்பு இன்றி இரத்து செய்ய ஏதுவாகும் என அறிவிக்கப்படுகிறது.

இணைப்பு – வரைபடம்.

ம. திருமலை

தலைவர்,

புத்திரகவுண்டன்பாளையம் ஊராட்சி.

தலைவர்
ஊராட்சி மன்றம்,
புத்திரகவுண்டன்பாளையம்.

பெறுதல்

திரு.எம். ஆறுமுகம் த/பெ. முருகேசன்,
2/310,மேற்குபனந்தோப்பு,
இராமநாயக்கன்பாளையம் கிராமம்,
ஆத்தூர் (வட்டம்), சேலம் மாவட்டம்.

நகல்

ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), சேலம் அவர்களுக் தகவலுக்கா பணிந்தனுப்பப்படுகிறது.